# தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2036 மார்ச் 2005


T-UN-676

## சிறப்புத் தமிழ்ப் பயிற்சி வகுப்புகள்

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியும், தமிழக அரசு காவல் துறையும் இணைந்து 2005 பிப்ரவரி 18 முதல் மார்ச்சு 10 வரை 21 நாட்கள் இந்திய தகுதிகாண்பருவ காவல் பணி அலுவலருக்கான சிறப்புத் தமிழ்ப் பயிற்சி வகுப்பினை நடத்தியது. இப்பயிற்சி வகுப்பில் தமிழ் எழுத்துக்கள் அறிமுகம், இலக்கணம், மரபுத் தொடர்கள், சொற்கள் உருவாக்குதல், குறிப்பு எடுத்தல், உரையாடல்,



மொழிபெயர்ப்பு, கட்டுரை, கையெழுத்து எழுதுதல், வாசித்தல், பேசுதல் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டன.

இப்பயிற்சி வகுப்பில் இந்திய காவல் பணி அலுவலர்கள் திரு கோட்னிஸ் அஸ்வின் முகுந்த் இ.கா.ப., திரு பிரதீப் குமார் இ.கா.ப., திரு அமித் குமார் சிங் இ.கா.ப, திரு இரா.சுதாகர் இ.கா.ப ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைத் தலைவர் முனைவர் ஆ.கார்த்திகேயன், மொழிபெயர்ப்புத் துறைத் தலைவர் முனைவர் சா.இராதாகிருட்டிணன், அகராதியியல் துறைத் தலைவர் முனைவர் எச்.சித்திரபுத்திரன் ஆகியோர் பயிற்றுநர்களாகச் செயல்பட்டனர்.

இந்திய மொழிகள் பள்ளித் துறையின் கணிப்பொறி மொழிக்கூடத்தில் தமிழ் கற்பித்தலுக்கான மென்தகட்டினைப் (செந்தமிழ் சிடி) பயன்படுத்தி தமிழ் கற்பிக்கப்பட்டது. மேலும் தொடக்க நாளான 18.02.2005 அன்று முன்னறித் தேர்வும் (Pre-test) இறுதி நாளன்று (10.03.2005) திறமைத் தேர்வும் (Post-test) நடத்தப்பட்டன.

இப்பயிற்சி வகுப்பின் இயக்குநராக இந்திய மொழிகள் பள்ளித் துறைத்தலைவர் முனைவர் வே.சா.அருள்ராஜ் அவர்களும், ஒருங்கிணைப்பாளராக முனைவர் இரா.முரளிதரன் அவர்களும் செயல்பட்டனர். இவர்கள் பயிற்றுநராகவும் செயல்பட்டனர்.

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியும், தமிழக அரசு நிர்வாக சீர்திருத்தத்துறை (பயிற்சி 2) யும் இணைந்து 2005 பிப்ரவரி 09 முதல் மார்ச்சு 01 வரை 21 நாட்கள் இந்திய தகுதிகாண்பருவ ஆட்சிப் பணி அலுவலருக்கான சிறப்புத் தமிழ்ப் பயிற்சி வகுப்பினை நடத்தியது. இப்பயிற்சி வகுப்பில் தமிழ் எழுத்துக்கள் அறிமுகம், இலக்கணம், மரபுத் தொடர்கள், சொற்கள் உருவாக்குதல், குறிப்பு எடுத்தல், உரையாடல், மொழிபெயர்ப்பு, கட்டுரை, கையெழுத்து எழுதுதல், வாசித்தல், பேசுதல் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டன.

இப்பயிற்சியின்போது தஞ்சை மாவட்ட உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி பூஜா குல்கர்னி என்னும் இந்திய ஆட்சிப் பணி அலுவலருக்கு நமது பல்கலைக்கழகப் பேராசிரியர்களைக் கொண்டு சிறப்புத் தமிழ்ப் பயிற்சிகளையும், துறையின் கணிப்பொறி மொழிக்கூடத்தில் தமிழ் கற்பித்தலுக்கான மென்தகட்டினைப் (செந்தமிழ் சிடி) பயன்படுத்தியும் தமிழ் கற்பிக்கப்பட்டது. மேலும் தொடக்க நாளான 09.02.2005 அன்று முன்னறித் தேர்வும் (Pre-test) இறுதி நாளன்று திறமைத் தேர்வும் (Post-test) நடத்தப்பட்டன. முன்னறிவுத் தேர்வுக்கான வினாக்களுக்குப் போதிய தமிழ்ப் பயிற்சி இன்மையால் அலுவலரால் பதில் எழுத இயலவில்லை. ஆனால் திறமைத் தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பயிற்சியின் பலனாக சரியான பதில்களை நல்ல முறையில் தந்து தேர்ச்சி பெற்றுள்ளார்.




அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைத் தலைவர் முனைவர் ஆ.கார்த்திகேயன், மொழிபெயர்ப்புத் துறைத் தலைவர் முனைவர் ச.இராதாகிருட்டிணன், அகராதியியல் துறைத் தலைவர் முனைவர் எச்.சித்திரபுத்திரன் ஆகியோர் பயிற்றுநர்களாகச் செயல்பட்டனர். 90 மணிநேர வகுப்புகளைக் கொண்ட இப்பயிற்சியின் இயக்குநராக இந்திய மொழிகள் பள்ளித் துறைத்தலைவர் முனைவர் வே.சா.அருள்ராஜ் அவர்களும், ஒருங்கிணைப்பாளராக முனைவர் இரா.முரளிதரன் அவர்களும் செயல்பட்டனர். இவர்கள் பயிற்றுநராகவும் செயல்பட்டனர்.

–முனைவர் வே.சா.அருள்ராஜ், இந்திய மொழிகள் பள்ளி



# பொங்கல் விழா 2005







தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழாவையொட்டி மரபு இசை, அம்மானை, பரமபதம், கும்மி, கோலாட்டம், கரகம், பல்லாங்குழி, வண்ணக்கோலமிடுதல், உறிஅடித்தல், வழுக்குமரம் ஏறுதல் போன்ற 64 வகையான சிறப்புப் போட்டிகள் நடைபெற்றன. கிராமிய நடனம், கரகம், கிராமியப் பாடல்கள், பல்லாங்குழி, தாயம் போன்றவற்றில் பெரும்பான்மையான மாணவிகள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இதற்கான நிறைவு விழா 12.03.2005 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர் முனைவர் சே.பிரேமா அவர்கள் தலைமைதாங்கினார்கள். திருவோணம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சி.இராசேந்திரன் அவர்கள் பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். இந்தியன் வங்கி கோட்ட மேலாளர் திரு சீனிவாசன், கிளை மேலாளர் திரு பாலு, பேங்க் ஆப் இந்தியா மேலாளர் திரு விஜயக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விளையாட்டு விழா நிகழ்ச்சிகளை முனைவர் க.பாஸ்கரன் அவர்களும், கல்வி நிகழ்ச்சிகளை முனைவர் கு.அண்ணாதுரை அவர்களும், கலை நிகழ்ச்சிகளை முனைவர் மு.இராமசாமி அவர்களும் ஒருங்கிணைத்தனர். பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் த.கோ.பரமசிவம் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். மக்கள் தொடர்பு அலுவலர் முனைவர் அ.வள்ளிநாயகம் அவர்கள் நன்றி கூறினார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு அரங்கம் கட்ட உதவுவதாக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள்.

– முனைவர் செ.வள்ளிநாயகம் மக்கள் தொடர்பு அலுவலர்

## அரசுச் செயலாளர் பாராட்டுக் கடிதம்

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையில் கடந்த 5 ஆண்டுகளில் விற்பனை அதிகரித்ததைப் பாராட்டி, தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அரசுச் செயலாளர் திரு பு.ஏ.இராமையா, இ.ஆ.ப. அவர்கள் பதிவாளர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தின் ஒரு பகுதி:

**"அரசின் குறிப்பறிந்து ஊக்கமுடன் பணியாற்றி 2001-ஆம் ஆண்டு முதல் 2004-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரையிலான காலத்தில் புத்தக விற்பனையினை உரூ.81,93,751/- ஆக உயர்த்திட அயராது பணியாற்றிய தங்களையும், தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன். இதேபோன்று தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயல்பட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்".**

– முனைவர் ஆ.இராமநாதன்,
இயக்குநர் (பொ),பதிப்புத்துறை

## தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள்
## 50% சிறப்புத் தள்ளுபடி விற்பனை

எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு 15.04.2005 முதல் 14.05.2005 வரை பதிப்புத்துறை வெளியீடுகளுக்கு 50% சிறப்புத் தள்ளுபடியில் நூல்கள் விற்பனை செய்யப்பட உள்ளன. இவற்றை அனைவரும் வாங்கிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### தமிழ்க்கலை

தவீழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு இதழான தமிழ்க்கலை இதுவரை 22 இதழ்கள் வெளிவந்துள்ளன. இவற்றை எப்போதும் 50% கழிவு விலையில் பெறலாம். இந்த அனைத்து இதழ்களின் மொத்த விலை உரூ.720/- இவற்றை ஒட்டுமொத்தமாக வாங்குவோர்க்கு மேலும் சலுகை விலையில் உரூ.300/-க்கே அனைத்து இதழ்களும் அளிக்கப்பெறும்.

### Tamil Civilization

இதுவரை 24 இதழ்கள் வெளிவந்துள்ளன. இந்த இதழ்களை எப்போதும் 50% கழிவு விலையில் பெறலாம். 24 இதழ்களின் மொத்த விலை உரூ.705/-. இவற்றை ஒட்டு மொத்தமாக வாங்குவோர்க்கு மேலும் சலுகை விலையாக உரூ.300/-க்கு அனைத்து இதழ்களும் அளிக்கப் பெறும்.

அனைத்து இதழ்களும் இருப்பு உள்ளவரை மட்டுமேஇந்தச் சலுகை விலை பொருந்தும்.

–முனைவர் ஆ.இராமநாதன், இயக்குநர் (பொ),பதிப்புத்துறை


## முதல் நடமாடும் நூலகம்


1920-ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்ட மன்னார்குடி, கௌமார குருகுலம் இந்தியாவில் தோன்றிய முறைசாரா கல்வி இயக்கங்களின் முன்னோடி எனக் கூறலாம். இக்குருகுலம் மன்னார்குடியைச் சுற்றி 12 மைல் தூரத்திற்குள் உள்ள கிராமமக்களின் கல்வி வளத்திற்காக அமைக்கப்பட்டது. இங்கு சித்திரை, ஐப்பசி மாதங்களில் கிராமஇளைஞர்களுக்கு பிரத்தியேகப் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டு உயர்தரக்கல்வி போதிக்கப்பட்டது.

கிராமங்களில் உள்ள முதியோர்களுக்கு சமயம், ஒழுக்கம், சுகாதாரம், கிராமப் பொருளாதாரம், தமிழ்மொழி, தேசிய வரலாறு, அறிவியல் தொடர்பான பல செய்திகள் பல அறிஞர்களைக் கொண்டு கௌமார குருகுலத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

இந்தக் குருகுலத்தின் சார்பில் 1931-ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம் குருகுலத்தின் தலைவர் பொறியாளர் எஸ்.வி.கனகசபை பிள்ளை அவர்களால் வடிவமைக்கப்பட்டு மேலவாசல் என்ற கிராமத்தில் துவங்கப்பெற்றது. இந்நடமாடும் நூலக வண்டியை இந்தியாவின் நூலகத் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் எஸ்.ஆர்.ரெங்கநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்.

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பொறுப்பான நபர் ஒருவர் இரண்டு மாடுகளைக் கொண்டு சென்று அந்தந்த கிராமத்திற்கு நூலக வண்டியைக் கொண்டு சென்றனர். நூலக வண்டி ஒவ்வொரு கிராமத்திலும் இரவு






தங்கியிருந்தபோது அறிவியல் தொடர்பான படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் ஒளி வில்லைகள் முலம் படங்கள் காட்டப்பட்டன. இந்த நடமாடும் நூலக வண்டி மேலவாசலைச் சுற்றியுள்ள 95 கிராமங்களுக்குப் பயணம் செய்துள்ளது. இந்நடமாடும் நூலக வண்டி 1933-ஆம் ஆணடில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவின்போது அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியிலும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு சிறப்புமிக்க நடமாடும் நூலக வண்டியின் மாதிரி ஒன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நடமாடும் நூலக வண்டியில் பயணம் செய்த பெரும்பான்மையான நூல்கள் தற்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் இடம்பெற்றுள்ளது. இதில் வாலிபர் கல்வி, முதியோர் கிராமக் கல்வி, மருத்துவம் போன்ற பலதரப்பட்ட நூல்கள் இடம்பெற்றுள்ளன.

– முனைவர் பா.சுந்தரேசன், இயக்குநர் (பொ), த.ப.க.நூலகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

இ.அ.ப. மட்டும்

நூலஞ்சல்

136. நூலகர்,
சரஸ்வதிமகால் நூலகம்,
தஞ்சாவூர்.

# பள்ளி ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி




தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறையும் மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனமும் இணைந்து 2005, பிப்ரவரி 21 முதல் 27 வரை தஞ்சாவூர் மாவட்ட தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான தமிழ் ஒலிகளின் ஒலிப்பு முறைக்கான பணியிடைப் பயிற்சியை நடத்தின. 42 பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற இந்தப் பயிற்சியில் மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவன துணை இயக்குநர் முனைவர் சா மோகன்லால் அவர்களும் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர் எம்.சுசீலா அவர்களும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல்துறையின் ஓய்வு பெற்ற பேராசிரியர் க.முருகையனும், பேராசிரியர் சாம்மோகன்லாலும் 7 நாட்களும் ஒலிப்புமுறைப் பயிற்சியை அளித்த இந்தப் பயிலரங்கில் சென்னைப் பல்கலைக்கழகம், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த பேராசிரியர்களும் பங்குபெற்று வகுப்புகள் நடத்தினர். மார்ச் 27-ல் முடிவு பெற்ற இந்தப் பயிற்சியின் இறுதியில் பேராசிரியர் சாம்மோகன்லால் நிறைவுரை றூற்றி ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

–முனைவர் எம்.சுசீலா, மொழியியல் துறை

## பிப்ரவரி 2005 இல்... முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. சி.சாவித்திரி<br>இந்திய மொழிகள் பள்ளி | Contribution of European Scholars to Telugu Language Education during pre-independence period (1800-1900) | 07.02.2005 |
| 2. ஆர்.கண்ணன்<br>தத்துவ மையம் | தமிழ்ப் புதினங்களில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்– ஒரு தத்துவக் கண்ணோட்டம் | 28.02.2005 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு



பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001.